மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : அப்படி ஒன்றும் கண்டிப்பான வரன்முறை கிடையாது. (திருமதி அனந்தநாயகி எழுந்தார்கள்) உட்காருங்கள். 'யு டேக் இட் ஈஸி'. அவையில் ஒரு கலகலப்புக்காக அப்படிக் கூறுகிறார். அவ்வளவுதான்.

(3) புது அமைச்சர் அறிமுகம்.

திரு. கே. ஏ. வகாப் : துணைத் தலைவரவர்களே, நம்முடைய அவைக்கு புதிய அமைச்சரவர்கள் வந்திருக்கிறார்கள். அவர்களை அங்கத்தினர்களுக்கு அறிமுகம் செய்து வைக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : புதிய அமைச்சரவர்களை அறிமுகப்படுத்தித்தான் தெரிந்துகொள்ளவேண்டுமென்று இல்லை. வேண்டுமானால் அமைச்சரவர்களே தன்னுடைய திருமுகத்தைக் காட்டுவார்கள். (மாண்புமிகு திரு. மன்னை நாராயணசாமி அவர்கள் எழுந்து, கைகூப்பி வணக்கம் தெரிவித்துவிட்டு உட்கார்ந்தார்கள்) அமைச்சரவர்களை அவையின் சார்பில் வரவேற்று, வாழ்த்துகிறேன்.

திரு. திருப்பூர் ஏ. எம். மொய்தீன் : இந்த புதிய அமைச்சரவர்களை எனக்கு 35 வருட காலமாகத் தெரியும். ஆரம்பக் காலத்திலிருந்தே சுயமரியாதை இயக்கத்தில் மிக்க ஈடுபாடு உள்ளவர். அதிலே அழுத்தம் திருத்தமான நம்பிக்கை உடையவர். அவர் அமைச்சராக வந்திருப்பது நானே அமைச்சராக வந்திருப்பதுபோன்றிருக்கிறது. எனக்கு அமைச்சராகக்கூடிய வாய்ப்பு இல்லையானாலும் அவர் அமைச்சராக வந்திருப்பது குறித்து மகிழ்ச்சியடைகிறேன் ; பெருமைப்படுகிறேன் ; பாராட்டுகிறேன்.

(2) 1972-73-ம் ஆண்டுக்கான வரவு-செலவுத் திட்டத்தின் மீது பொது விவாதம்—தொடர்ச்சி.

திரு. கே. டி. கே. தங்கமணி: மிஸ்டர் டெபுடி ஸ்பீக்கர் சார், இந்த நிதிநிலை அறிக்கையைப் பற்றி பலவித கருத்துக்கள் இங்கே கூறப்பட்டன. அந்தக் கருத்துக்கள் எல்லாம் மறைந்து போயிருந்தாலும் இருக்கலாம். எனவே, அவைகளில் ஒருசில